தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 14, சுக்ல — திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி *27*, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

'' உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.''

தமக்குப் பயன் உள்ளபோது நட்புக்கொண்டு பயன் இல்லை என்று தெரிந்ததும் நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றால் என்ன? இழந்தால் என்ன?

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. க. கோ. கிருஷ்ணசாமி அவர்கள் 22-1-1990ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. கோ. கிருஷ்ணசாமி அவர்கள் 1980ஆம் ஆண்டிலிருந்து 1984ஆம் ஆண்டுவரை பெரியார் மாவட்டம் காங்கேயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)